உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

கோ.எண்:1818/வருவாய்/உ.ந./நசுமீஅ/2020 ஜவகர் நகர், தேதி 11-06-2020

# குறுகிய கால பொது ஏல அறிவிப்பு

புதுச்சேரி, லாஸ்பேட்டை, கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள உழவர்கரை நகராட்சி நவீன சுகாதார மீன் அங்காடி தரைத்தளத்தில் உள்ள மீன் ஏல அறை, காய்கறி கடை மற்றும் குளிரூட்டப்பட்ட அறை ஆகிய மூன்று இனங்களுக்கு ஓராண்டிற்கான உரிமம் பெற பகிரங்க **"பொது வாய்மொழி ஏலம்"** கீழ்காணும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளின்படி நடத்தப்பட உள்ளது.

ஏலத்தேதி மற்றும் நேரம்: 22.06.2020 மாலை 4 மணி.
ஏலம் நடைபெறும் இடம்: உழவர்கரை நகராட்சி, ஜவகர் நகர், புதுச்சேரி.

| வ. எண் | ஏல விபரம் | நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓராண்டிற்கான ஏலத்தொகை ரூ. | பிணை வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மீன் ஏல அறை | 5,99,500/- | 29,975/- |
| 2. | காய்கறி கடை | 1,18,800/- | 5,940/- |
| 3. | குளிரூட்டப்பட்ட அறை (as is where is condition) | 1,80,000/- | 9,000/- |

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுப்பது கூடாது.

2. ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை வலைதளமான www.oulmun.in –ல் இருந்து பதிவிறக்கம் செய்து சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக ஏலப்படிவம் சமர்பித்தல் வேண்டும்.

4. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்திசெய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான பிணை வைப்புத் தொகையை ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்பித்தல் வேண்டும்.

...2/-

Kandasamy
11/6/2020

5. ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் 22-06-2020 மாலை 3 மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்கள் அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினில் "ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி" என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் மீன் ஏல அறை அல்லது காய்கறி கடை அல்லது குளிரூட்டப்பட்ட அறை ஏல விண்ணப்பப் படிவம் என்று குறிப்பிட வேண்டும்.

6. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியில் பெறப்பட்ட வரி பாக்கியில்லா சான்றிதழை ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்தல் வேண்டும்.

7. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையை விட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிட வேண்டும். குறைந்தபட்ச ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும். எவருடைய ஏலப்படிவத்தில் ஏலத்தொகை அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதோ **அந்த தொகையிலிருந்து வாய்மொழி ஏலம் ஆரம்பிக்கப்படும்.**

8. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை அதேநாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய பிணை வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும்.

9. புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட மீனவ சமுதாயத்தை சேர்ந்தவர் மீன் ஏல அறையை ஏலம் எடுத்தால் அவர்களுக்கு மட்டும் ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இந்த சலுகையை பெறுவதற்கு ஏலப் படிவத்துடன் புதுச்சேரி மீன் வளத்துறை வழங்கிய அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

10. குளிரூட்டப்பட்ட அறையில் குளிர்சாதன பெட்டி வேலை செய்யவில்லை. தற்போது இருக்கும் நிலையில் அப்படியே ஒப்படைக்கப்படும்.

11. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அதற்குரிய உரிமம் வழங்கப்படும்.

12. விண்ணப்பம் அளித்த நபர்கள் மட்டுமே ஏலத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். வெற்றி பெறாத ஏலதாரரின் முன்வைப்பு தொகை அன்றே திருப்பி தரப்படும்.

13. ஏலம் தொடர்பான இதர நிபந்தனைகளை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து தெரிந்துகொள்ளலாம்.

14. ஏலத்தை தள்ளி வைப்பதற்கும் அல்லது நிறுத்தி வைப்பதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

15. மேற்சொன்ன இனத்திற்கு ஜெனரேட்டர் பயன்படுத்தப்படின் அதற்குண்டான கட்டணம் தனியாக வசூலிக்கப்படும்.

16. வெற்றி பெற்ற ஏலதாரர் மின்கட்டணத்தை பிரதி மாதமும் தவறாமல் செலுத்துதல் வேண்டும் அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

Kandasamy
11/6/2020

**(M. கந்தசாமி)**
**ஆணையர்**